பட்டிருக்கிறார். இதைப்பற்றி மகஜர்கள் அரசாங்கத்திற்கு வந்திருக்கின்றன. அதன் மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தஞ்சாவூர் மருத்துவ நிலைய சிவில் ஸர்ஜன் அவர்கள், வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்கள் எல்லாம் 60 வயதுக்கு மேற்பட்டு இருக்கிறவர்கள்தான் என்று சொல்லியிருக்கிறார்கள்.

திரு. கோ. சி. மணி : மற்றைய நகராட்சி மன்றங்களில் உள்ள தலைவர்களுக்கும் இம்மாதிரி வயது கூடுதலாக இருக்கக்கூடாது என்று அரசாங்கம் ஏதாவது நிபந்தனை விதித்திருக்கிறதா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இந்தக் கேள்வி தஞ்சாவூரைப் பற்றியது. பிற விவரங்களைப் பற்றி இப்போது சொல்வதற்கில்லை.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note*.—**An asterisk *at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—EXPUNCTION OF OBJECTIONABLE REMARKS.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நேற்றையதினம் கனம் அங்கத்தினர் திரு. புலவர் கோவிந்தன் அவர்கள் பேசும்
9 00 a.m. போது தாங்கள் குறுக்கிட்டு அவருடைய பேச்சு நடவடிக்கை புத்தகங்களில் ஏறக்கூடாது என்று கூறியதாக இன்று சில பத்திரிகைகளில் செய்தி வெளியாகியிருக்கின்றது. ஆனால் தாங்கள் என்னிடத்தில் கூறியது சில குறிப்பிட்ட பகுதிகள் மட்டும்தான் நடவடிக்கையிலிருந்து நீக்கப்படுவதாக குறிப்பிட்டீர்கள். ஆனால் செய்தி இவ்வாறாக இருக்கிறது . . .

MR. SPEAKER : Because I was not able to pick out the portion to be expunged in the course of the delivery of the speech, I had to order that the whole speech be expunged. After perusing the official report of the speech, I have marked out some portions of the speech which alone will be expunged.

III.—ADJOURNMENT MOTION *RE*-RICE SCARCITY IN MADRAS.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சென்னை நகரத்திலும் தமிழ்நாட்டிலும் அரிசி கிடைப்பது மிகவும் கடினமாக இருக்கிறது. நம்முடைய அரசாங்கத்திலிருந்து, ஆந்திராவிலிருந்து அரிசி வாங்குவதற்கு யார் யாருக்கு அதிகாரம் கொடுத்திருந்தார்களோ அவர்கள் அங்கே போய் அரிசி வாங்கியிருந்தும், அவைகள் எல்லாம் ஆந்திர அரசாங்கத்தால் தடுக்கப்பட்டிருக்கிறது. சேலம் ஜில்லாவில் ஒரு கூட்டுறவு சொஸைட்டிக்கு வாங்கியிருந்த அரிசியும் தடை செய்யப்பட்டிருக்கிறது. குறிப்பாக இவ்விதம் தடை செய்திருப்பது மிகவும் வருத்தத்திற்குரிய விஷயமாகும். ஆகவே நமது முதலமைச்சர் அவர்கள் தங்கள் செல்வாக்கை பயன்படுத்தி ஆந்திர அரசாங்கம்